**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1998 இன் 31 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் பிரகாரம் 2009 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட 2009 இன் 1 ஆம் இலக்க உரித்துக்களை பதிவு செய்யும் (காப்புறுதி நிதியம்) 41 ஆம் கட்டளை மற்றும் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று

வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு திறைசேரி பிணைமுறிகளில் காசாக முதலீடு செய்யப்பட்ட ரூபா 29,658,414 இற்குப் பதிலாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 02 இற்கு இணங்காமல் காசுப்பாய்ச்சல் கூற்றில் அந்த ஆண்டிற்கான முதலீடு ரூபா 97,189,304 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், முதிர்வின் போது பெறப்பட்ட தொகை ரூபா 4,611,700 ஆக காணப்பட்ட போதிலும் அதற்கு பதிலாக அக் கூற்றில் ரூபா 78,706,067 தொகை பெறுவனவுகளாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி பிணைமுறிககளின் பெறுமதி ரூபா 97,189,304 ஆகும். 2018 மற்றும் 2019 இல் கொள்வனவு செய்யப்பட்ட பிணைமுறிகளின் பெறுமதி முறையே ரூபா 3,082,528 மற்றும் ரூபா 65,112,518 ஆகும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 யூன் மாதத்தின் உரித்துக்களை பதிவுசெய்யும் மொத்த வருமானம் ரூபா 2,392,560 ஆக காணப்பட்டதுடன் அதில் 40 சதவீதம் அதாவது ரூபா 957,024 காப்புறுதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு ரூபா 938,016 தொகை மாத்திரம் செலவு வைக்கப்பட்டதால் மீளாய்வாண்டுக்கான வருமானம் ரூபா 19,008 ஆல் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. | 2020 சனவரியில் வருமான மிகைப்படுத்தலை சீர்செய்வதற்கு யூன் மாத வருமானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.. |
| (ஆ) | நிதியத்தின் வருமானம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 8,016,600 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பிழையை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது 2021 ஆம் ஆணடில் சீர்செய்யப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 01 ஆம் இலக்க உரித்துக்களை பதிவுசெய்தல் கட்டளைகள் (காப்புறுதி நிதிகள்) | | | |
| (I) | கட்டளை 42 (ஏ), 4 | ஒவ்வொரு மாத இறுதியிலும் காசுப் புத்தகத்திலோ அல்லது வங்கிக் கணக்கிலோ மீதியெதுவும் இருக்கக் கூடாத போதிலும் 4 மாதங்களின் போது குறைந்தபட்சமாக ரூபா 204,142 தொகையும் அதிகபட்சமாக ரூபா 331,343 தொகையுமான மீதி ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உரித்துப் பதிவாளர் நாயகத்தின் கணக்கில் காணப்பட்டது. | பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய பணம் தவறுதலாக உரித்து பதிவாளர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட கட்டளைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (II) | கட்டளை 15 (1) | முகாமைத்துவ சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதத்தில் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த கூட்டங்களை நடாத்த முடியாதிருந்தது. | குறிப்பிடப்பட்ட கட்டளைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (III) | கட்டளை 42 (ஏ) | உரித்துப் பதிவுக் கட்டணத்திலிருந்து நிதியத்திற்கு மாற்றப்பட்ட நாற்பது சதவீதத்தில் இருபத்தைந்து சதவீதம் காப்புறுதி நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக உரித்துப் பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு | இந்த மாதங்களில் நிதியத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் தொடர்புடைய நிர்வாகச் செலவினங்கள் உரித்துப் பதிவாளரிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட கட்டளைகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாத இறுதியில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 சனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மாற்றப்பட வேண்டிய ரூபா 772,046 கூட்டுமொத்தம் உரித்துப் பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்ஏ/2019/(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக்குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளது. | குறிப்பிட்டவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான வாய்ப்பு காணப்படவில்லை. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18,201,794 மிகையாக உள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 24,684,699 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 6,482,905 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. உரித்துக்களை பதிவு செய்வதிலிருந்தான வருமானம் ரூபா 8,646,373 ஆல் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2019 ஆம் ஆண்டிற்கான திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 421,183 ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 6,414,576 முகப்பெறுமதியுடைய 6 திறைசேரி உண்டியல்கள் மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடைந்திருந்ததால் 2020 ஆம் ஆண்டிற்கான திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி ரூபா 137,630 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 283,553 ஆல் அதாவது 67 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் திறைசேரி பிணைமுறிகள் மீதான வட்டி வருமானம் ரூபா 2,610,701 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இது ரூபா 6,969,486 ஆக காணப்பட்டதால் பிணைமுறிகள் மீதான வட்டி ரூபா 4,358,785 ஆல் அல்லது 167 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் இந்த நிதியம் நிறுவப்பட்டிருந்த போதிலும் காணி உரிமைத்துவத்தை பதிவுசெய்யும் விடயத்தில் தவறான தீர்மானத்தினால் ஏற்படும் நட்டத்திற்காக தரப்பினருக்கு அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டிய நட்டாஈட்டுத் தொகையை ஈடுசெய்யும் வகையில், அப் பணி எதனையும் நிறைவேற்றுவதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடு எதுவும் நிதியத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் 2020 இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, மீளாய்வாண்டின் இறுதியில் உரித்துக் காப்புறுதி நிதியம் நிறுவப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்துவிட்ட போதிலும் இந்தக் காலப்பகுதியில் எந்தவித நட்டஈடும் செலுத்தப்பட்டிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை செயற்பாட்டுச் செலவினங்களுக்குப் பின்னர் மொத்த வருமானத்தை முதலீடு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காணி நிர்ணயத் திணைக்களம் காப்புறுதி நிதியம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. | நிதியத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகத்திற்கான உரித்து வருமானம் தொடர்பான அறிக்கைகளை 2 வாரங்களுக்கு ஒருமுறை உரித்துப் பதிவாளர்கள் அனுப்ப வேண்டிய போதிலும் பெறப்பட்ட ரூபா 5,994,495 கூட்டுமொத்தமான வருமானமானது வங்கிகளால் உரிய வருமான அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்காத கூற்றுக்களின் பிரகாரமான நிதியத்தின் வருமானமாக காசுப்புத்தகத்திலும் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் வருமானத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டில் 17 உரித்துப் | அலுவலகங்கள் மூலம் 2 வாரங்களிற்கு ஒருமுறை வருமான அறிக்கை சமர்ப்பிக்கப்படாததால் இந்த நிலைமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பதிவாளர் அலுவலகங்களால் வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக 69 வருமான அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான செலுத்த வேண்டிய ரூபா 386,400 பெறுமதியான கணக்காய்வுக் கட்டணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல். | செலுத்த வேண்டிய செலவினங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 (1) (அ) இன் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதி நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வுகள் 2021 முதல் மேற்கொள்ளப்படுகிறது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |